செய்தி வெளியீடு எண்:147 நாள் :09.04.2015

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும்** தமிழக அரசின் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை தொடர்பான ஆய்வுக்கூட்டம் இன்று (09.04.2015) மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.**கே.டி.ராஜேந்திரபாலாஜி** அவர்கள் தலைமையில் சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் கீழ் செயல்படும் அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்கள் மற்றும் பணியாளர்கள் நலன், கணினி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை தமிழக அரசின் அனைத்துத் துறைகளுக்கு தேவையான படிவங்கள், புத்தகங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை அச்சிட்டும் காகித வகையினங்களை கொள்முதல் செய்து வழங்கியும் மற்றும் எழுதுபொருள் தேவைகளை பூர்த்தி செய்தும் ஏறத்தாழ 182 ஆண்டுகளாக நிறைவேற்றி வருவதுடன் தமிழக மக்களின் இன்றியமையாத தேவையான பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள், சாடிதிச் சான்றிதழ் மற்றும் பெயர் மாற்ற அரசிதழ்கள் ஆகியவற்றை அச்சிட்டு வழங்கி இத்துறை சேவைத் துறையாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதன்பொருட்டு, இவ்வரசு பதவியேற்ற நாள் முதல் அதிநவீன இயந்திரங்கள் வாங்கவும் மற்றும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அச்சகங்களை நவீன மயமாக்குதல் மற்றும் 2011–12 முதல் 2014–15 வரையிலான ஆண்டுகளில் மானியகோரிக்கைகள் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் 110 விதியின் கீழ் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் அதன்

தற்போதைய நிலை குறித்து விவாதிக்கப்பட்டது. 2011–12, 2012–13 மற்றும் 2013–14 ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் யாவும் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளன. 2014–15 ஆண்டில் அறிவிக்கப்பட்ட சென்னை அரசு மைய அச்சகத்திற்கு 21.59 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டிடம், 2.50 கோடி மதிப்பீட்டில் புத்தகம் கட்டும் பிரிவிற்கு தானியங்கி புத்தகம் தைக்கும் இயந்திரம் மற்றும் அரசு மைய அச்சகத்திற்கு 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சரக்கு அனுப்புகை வாகனம் வாங்குதல் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது. இதுகுறித்து பணிகள் யாவும் சம்பந்தப்பட்ட துறைகளின் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்கான பணிகளை முடித்து விரைந்து செயலாக்கத்திற்கு கொண்டுவருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் முனைவர் மூ.ராசாராம், இ.ஆ.ப. அவர்கள், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநர் திரு. ஜெ.ஜெயகாந்தன், இ.ஆ.ப. அவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் எழுதுபொருள் அச்சுத் துறை அரசு துணைச் செயலாளர் திரு.வெ.கூழுச்சாமி, சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் திரு. தாமோதரன், மற்றும் துறை உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

–––––

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**